### கடற்கரை கவியரங்க புலனப் பதிவு

# பாரதீ!

(சுப்பிரமணியப் பாரதிக்கு இன்று பிறந்தநாள்)
11-12-2024



\# அறிவின் நிலையை
அழகுடன் சொல்லல் பாரதி!
அறிவின் மேண்மையை
அடுத்து உரைத்திட,
அதுவும் பாரதி!

\# எட்டையபுரத்துச்
செல்வனுக்கு,
சமஸ்தானம் சூட்டி,
சரித்திரத்தில் நிலைத்த பெயர் பாரதி!

இன்னும் இரு பாரதிகள்!
எங்கே போயினர்?
பெயரோடு,
பட்டம் தாங்கி வாழ்ந்தனர்!

ஆனால்,
எங்கள் இளஞ்சிங்கம்,
சுப்பிரமணியன் எனும் பெயரைத்,
துறந்துவிட்டு,
பாரதி யென்றே,
மண்ணில் நிலையானான்!

\# புதிய சொல், புதிய சிந்தனை!
அத்துனை மரபு மீறல்களுக்கும்,
அவனே சொந்தக்காரன்!
உயிர்களை நேசித்தான்!
ஒவ்வொரு உயிரும் தனதென்று,
உளம் மகிழ்ந்து வாழ்ந்தான்!

\# கடவுளின் கூறுகளைக்
கனமின்றி மக்களுக்கு,
எடுத்துரைத்தான்!
உள்ளத்தில் ஒளியேற்றினான்!
உண்மைக்குப் போராடினான்!

\# காலம் அவனை
ஒரு கவிஞனாக மட்டுமே
கட்டுவித்த போதும்,
நாளைய நிலைக்காய்,
இன்றேச் சிந்தித்தவன்!

\# பெண் விடுதலை, சமத்துவம்,
தீண்டாமை ஒழிப்பு
அத்துனையுமே அவன்,
கூறுகளாயிருந்தன!
\# வாழ்ந்த போது,
அவனைப் பலரும் நேசிக்க வில்லை!
அதற்காக, எவரிடத்தும்,
அவன் யாசிக்கவில்லை!
நாளைய உலகம், மக்களின் நலன் மட்டுமே
அவன் சிந்தனையில் தீயாய் நின்றது!

\# ஏற்றதாழ்வுகளை என்றும் ஏற்காதவன்!
உயிர்களிடத்தில் எல்லாம் உறவு பூண்டவன்,
மானுடத்தில் எப்படிப் பேதலிப்பான்?

\# அவன், மகாகவி மட்டுமல்ல!
ஒரு யுவ புருஷன்!
கடந்த இரு நூற்றாண்டுகளுக்கு,
இடையில் தோன்றிய காலப் பெட்டகம்!

\# இயற்கையோ; இறைமையோ,
மானுடத்தைத் திருத்திப் புதுபிக்க,
அவ்வபோது, ஒருவரை பிறப்பிக்கும்!

அப்படி வந்த சிலருள் ஒருவன்
எங்கள் பாரதி!

\# சமூகத்தில் புரையோடி இருந்த,
தீமைகளைக் கொளுத்த வந்ததால்,
அவன் **பாரதீ** ஆனான்!

\#அவன் செப்பிய அறங்களைச்
சிதையாது காப்போம்!
அவன் நினைவைப் போற்றி,
நெறியுடன் வாழ்வோம்!

நினைவில் நெகிழ்ந்து,
**கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்,** 11-12-2024